செ.வெ.எண். 265/2009(செமதொஅ) நாள் : 26.08.2009.

**<u>மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் காஞ்சிபுரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலந்து கொள்ளும் விழாவிற்கான முன்னேற்பாடு பணிகளை பார்வையிட்டார்.</u>**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வருகிற செப்டம்பர் 26 ஆம் தேதி காஞ்சிபுரத்தில் நடைபெற உள்ள முப்பெரும் விழாவில் கலந்து கொள்கிறார்கள். அன்று காஞ்சிபுரம் அண்ணா அரங்கில் கவியரங்கமும், பச்சையப்பன் ஆடவர் கல்லூரியின் எதிர்புறத்தில் உள்ள திடலில் விழாவும் நடைபெறுகிறது. இந்த விழாவிற்கான முன்னேற்பாடு பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்த பணிகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களும், மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா.வீராசாமி அவர்களும், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்களும் இன்று (26.08.2009) பார்வையிட்டார்கள்.

முதலில் காஞ்சிபுரம் நகராட்சிக்கு எதிரில் உள்ள அண்ணா அரங்கத்தினை புதுப்பிக்கும் பணிகளை பார்வையிட்டார்கள். பின்னர் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி எதிரிலுள்ள திடலை பார்வையிட்டு சில அறிவுரைகளை வழங்கினார்கள். அதன் பின்னர் பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத்திற்கு வருகை தந்தனர். அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணாவின் வாழ்க்கை வரலாற்று புகைப்படங்கள், அண்ணா பயன்படுத்திய ஆடைகள், பொருட்கள் ஆகியவற்றை பார்வையிட்டனர். அங்குள்ள பார்வையாளர் புத்தகத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கையொப்பமிட்டு வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தோஷ் கே.மிஸ்ரா,இ.ஆ.ப. கூடுதல் ஆட்சியர் டாக்டர் இரா.ஆனந்தகுமார்,இ.ஆ.ப.,மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு.பிரேம் ஆனந்த் சின்கா,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நம்பிராசன், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.க.சுந்தர், காஞ்சிபுரம் நகர மன்றத் தலைவர் திரு.வி.ராஜேந்திரன் மற்றும் நகரின் முக்கிய பிரமுகர்கள் உடன் இருந்தனர்.



செய்தி வெளியிடுபவர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம்.